# பிப்ரவரி 20 ஒருவரி நடப்பு நிகழ்வுகள்

**பிப்ரவரி 20 - உலக சமூக நீதிக்கான தினம்**

- **2019 தீம்: நீங்கள் அமைதி மற்றும் வளர்ச்சியை விரும்பினால், சமூக நீதிக்காக உழையுங்கள்**
- கேரளாவில் திருவனந்தபுரம் ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோவிலில் லட்சக்கணக்கான பெண்கள் கூடி பொங்கல் வைத்து வழிபாடு செய்தனர். **திரிபுரா**
- திரிபுராவின் முதல் மெகா உணவு பூங்கா அகர்தலாவின் துலாக்கோனா கிராமத்தில் சிகாரியா மெகா உணவு பூங்கா தொடங்கி வைக்கப்பட்டது.
- உத்தரப்பிரதேசத்தில் 510 கி.மீ நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்காக மத்திய அமைச்சர் நிதின் கட்காரி அடிக்கல் நாட்டினார்.
- இந்தியாவில் படிப்பதற்காக இலங்கையின் மாணவர்களுக்கு மகாத்மா காந்தி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.
- 12 பொதுத்துறை வங்கிகளில் 48,239 கோடி ரூபாயை செலுத்த அரசு திட்டம்.
- ஸ்டார்ட் அப் தொடக்க நிறுவனங்களின் மாநில அளவிலான தரவரிசை - இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது.
- இந்திய ஜனாதிபதி ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய சர்வதேச மாநாடு: சவால்கள் மற்றும் வாய்ப்புகள் (ENCO 2019) புது தில்லியில் துவக்கி வைத்தார்.
- விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு.ராதா மோகன் சிங் 14வது வேளாண் அறிவியல் காங்கிரஸில் உரையாற்றினார்.
- புதுடெல்லியில் "உள்ளூர் உணவு முறைகளால் ஆரோக்கியமான உணவை மேம்படுத்துதல்" பற்றிய தேசிய ஒர்க்ஷாப் நடைபெற்றது.
- திரு. தருண் ஸ்ரீதர் - **மீன்வளத்துறையின் கூடுதல் பொறுப்பு செயலாளர், விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம்**.
- இந்திய விவசாய ஆராய்ச்சி கவுன்சில் காலநிலை மாற்றத்தின் சிக்கல்களைத் தீர்க்க NICRA என்று அழைக்கப்படும் மெகா திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது.
- அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் நாட்டில் தரமான கல்வியை உயர்த்துவதற்கு தொழில்நுட்பத்தை ஒழுங்கமைப்பதற்காக ஆபரேஷன் டிஜிட்டல் வாரியத்தை தொடங்கினார்.
- சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையே ஒப்பந்தம்.
- எல்சிஏ தேஜாஸ் எம்.கே.I-ற்கு இறுதி செயல்பாட்டு அனுமதி.
- பெங்களூரில் 12-வது சர்வதேச ஏரோஸ்பேஸ் கண்காட்சி மற்றும் பாதுகாப்பு கண்காட்சி ஏரோ இந்தியா 2019-ஐ பாதுகாப்பு மந்திரி நிர்மலா சீதாராமன் திறந்து வைத்தார்.

- 70வது ஸ்ட்ராண்ட்ஜா நினைவுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய பெண்கள் குத்துச்சண்டை வீராங்கனை எனும் சாதனை படைத்தனர் நிகத் ஜரீன் (51 கிலோ) மற்றும் மீனா குமாரி தேவி (54 கிலோ).
- வங்கதேசத்திற்கு எதிரான ஒருநாள் தொடரில் நியூசிலாந்து 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

**Join Us on FB :**

**For English – Examsdaily** **For Tamil – Examsdaily Tamil**

**For WhatsAPP Group - Click Here**